தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 223 முதல் 244 /பேரூ/2023
நாள் 16.10.2023

திருமதி.P.ராஜலட்சுமி,
திருநகர்,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்கள்,

1) காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி
2) ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி
3) ஹைவேவிஸ் பேரூராட்சி
4) அனுமந்தன்பட்டி பேரூராட்சி
5) கெங்குவார்பட்டி பேரூராட்சி
6) போ. மீனாட்சிபுரம் பேரூராட்சி
7) பூதிப்புரம் பேரூராட்சி
8) தேவதானப்பட்டி பேரூராட்சி
9) மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி
10) வீரபாண்டி தேர்வுநிலை பேரூராட்சி
11) உத்தமபாளையம் தேர்வுநிலை பேரூராட்சி
12) வடுகபட்டி தேர்வுநிலை பேரூராட்சி
13) தேவாரம் தேர்வுநிலை பேரூராட்சி
14) தென்கரை தேர்வுநிலை பேரூராட்சி
15) தாமரைக்குளம் தேர்வுநிலை பேரூராட்சி
16) பண்ணைப்புரம் பேரூராட்சி
17) க . புதுப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி
18) பழனிசெட்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி
19) ஓடைப்பட்டி பேரூராட்சி
20) குச்சனூர் பேரூராட்சி
21) மார்க்கையன்கோட்டை பேரூராட்சி
22) கோம்பை, தேர்வுநிலை பேரூராட்சி தேனி மாவட்டம்

மற்றும்

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தேனி மண்டலம், தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்கள்

மதுரை மாவட்டம், திருநகர் 3வது நிறுத்தம், நேருஜி தெரு, நாகா காம்பளக்ஸ், எண்.C41–1, மோகனபிரியா டிரேடர்ஸ் என்ற முகவரியிலிருந்து பெறப்பட்ட திருமதி.P.ராஜலட்சுமி என்பவரின் 09.08.2023 நாளிட்ட 22 மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 09.08.2023 அன்று பெறப்பட்டு 223 முதல் 244 வரை / பேரூ / 2023 என்ற எண்களிட்ட முறையீட்டு மனுக்களாக பதிவு செய்யப்பட்டன. மேற்கண்ட மனுக்கள் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், திருநகர் 3வது நிறுத்தம், நேருஜி தெரு, நாகா காம்பளக்ஸ், எண்.C41–1, என்ற முகவரியிலிருந்து திருமதி.P.ராஜலட்சுமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது 22 புகார் மனுக்களில் கீழ்க்கண்ட ஒரே மாதிரியான புகார்களை தெரிவித்துள்ளார்:–

தேனி மாவட்டத்தில் செயல்படும் 22 பேரூராட்சிகளில் 2023 – 24 ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிகளுக்குத் தேவையான பொது சுகாதாரப் பொருட்கள், தெருவிளக்கு பொருட்கள் மற்றும் குடிநீர் குழாய் பொருட்களுக்கு இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது, எனது நிறுவனத்தின் மூலம் பொது சுகாதாரப் பொருட்களுக்கு இணையதளம் மூலமாக 22 பேரூராட்சிகளுக்கும் விலைப்புள்ளி அளித்திருந்தேன். ஆனால் இன்று வரை எந்தவித முடிவுகளும் எடுக்கப்படாமல் சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கும் வகையில் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட 22 பேரூராட்சிகளின் மீதான புகார் மனுக்கள் குறித்து அந்தந்த பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து விரிவான அறிக்கையைப் பெற்று, தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் மனுதாரர் ஆகியோர் 28.08.2023 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) மனுதாரர் திருமதி.P.ராஜலட்சுமி 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"தேனி மாவட்டத்தில் உள்ள கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள 22 பேரூராட்சிகளில் 2023 – 24 ஆம் ஆண்டிற்குத் தேவையான தெருவிளக்கு, பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் குழாய்களுக்கான பொருட்களுக்கு இணையதளம் வழியாக 12.6.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன.

1) காமயகவுண்டன்பட்டி
2) ஆண்டிபட்டி
3) ஹைவேவிஸ்
4) அனுமந்தன்பட்டி

5) கெங்குவார்பட்டி
6) போ. மீனாட்சிபுரம்
7) பூதிப்புரம்
8) தேவதானப்பட்டி
9) மேலச்சொக்கநாதபுரம்
10) வீரபாண்டி
11) உத்தமபாளையம்
12) வடுகபட்டி
13) தேவாரம்
14) தென்கரை
15) தாமரைக்குளம்
16) பண்ணைப்புரம்
17) க. புதுப்பட்டி
18) பழனிசெட்டிபட்டி
19) ஓடைப்பட்டி
20) குச்சனூர்
21) மார்க்கையன்கோட்டை
22) கோம்பை

மேற்கண்ட பொருள்களுக்கான ஒப்பந்தப் புள்ளியில் பொது சுகாதாரப் பொருட்கள் வழங்குதல் குறித்த ஒப்பந்தப்புள்ளியில் நானும் கலந்துக்கொண்டு இணையதளத்தின் வழியாக ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தேன். ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த மேற்கண்ட 22 பேரூராட்சிகளில் கீழ்கண்ட 6 பேரூராட்சிகளுக்கு என்னால் அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப ரீதியில் (Technical Bid) ஏற்றுக்கொள்ளப்பட்டது என தெரிவித்து அதற்கான ஆவணங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

1) தாமரைக்குளம்
2) தென்கரை
3) போ. மீனாட்சிபுரம்
4) கெங்குவார்பட்டி
5) பழனிசெட்டிபட்டி
6) க. புதுப்பட்டி

மேற்கண்ட 6 பேரூராட்சிகள் தவிர மீதமுள்ள 16 பேரூராட்சிகளில் எனது Technical Bid ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் சில அதாவது ஒப்பந்தப்புள்ளி கோருபவர் அந்தந்த மாவட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும் எனவும், தரச் சான்று சமர்ப்பிக்க வேண்டும் எனவும் காரணம் கூறியுள்ளனர்.

மேலும், சில பேரூராட்சிகளில் சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை கொடுப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் சில பேரூராட்சிகளில் தேவையான பொருட்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோராமல் தேவையற்ற பொருட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர், அதே போன்று மொத்த எண்ணிக்கையில் விலைப்புள்ளிகள் கோராமல், பொருட்களின் எண்ணிக்கையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளன. மேலும் பொது சுகாதாரப் பொருட்கள் எங்கு என்ன விலைக்கு வாங்கப்பட்டன என்கின்ற விவரமும் தெரியவில்லை. எனவே

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து ஆய்வு செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4) எதிர்மனுதாரர்களான தேனி மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநராகப் பணியாற்றும் திரு. நா.பாலசுப்பிரமணி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராகவும் (செயல் அலுவலர் நிர்வாகம்) ஹைவேவிஸ் பேரூராட்சி செயல் அலுவலராகவும் (பொறுப்பு) பணியாற்றும் திரு.கோ.சுப்பிரமணியன், கெங்குவார் பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ம.இராஜசேகர், பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.க.சிவக்குமார் வீரபாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலராகப் (பொறுப்பு) பணியாற்றும் திரு. ஆறுமுக நயினார், வடுகபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ரா.சு.சுரேஷ், உத்தமபாளையம் செயல் அலுவலராகவும், தேவாரம் பேரூராட்சி செயல் அலுவலராகவும் (பொறுப்பு) பணியாற்றும் திரு.கா.சின்னச்சாமி பாண்டியன், கோம்பை பேரூராட்சி செயல் அலுவலராகப் பணியாற்றும் திரு.மா.செல்லப்பிள்ளை ஆகியோர் 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ள மனுதாரரின் 9.8.2023 நாளிட்ட மனுவில், தேனி மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட 22 பேரூராட்சிகளுக்கு, தான் சுகாதார பொருட்களை அளிக்கும்பொருட்டு ஒப்பந்தப்புள்ளிகள் அளித்ததாகவும் அவரது ஒப்பந்தப்புள்ளிகள் L1 ஆக இருந்தபோதிலும், அவை பேரூராட்சிகளால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என தெரிவித்துள்ளனர்.

1) காமயகவுண்டன்பட்டி
2) ஆண்டிபட்டி
3) ஹைவேவிஸ்
4) அனுமந்தன்பட்டி
5) கெங்குவார்பட்டி
6) போ. மீனாட்சிபுரம்
7) பூதிப்புரம்
8) தேவதானப்பட்டி
9) மேலச்சொக்கநாதபுரம்
10) வீரபாண்டி
11) உத்தமபாளையம்
12) வடுகபட்டி
13) தேவாரம்
14) தென்கரை
15) தாமரைக்குளம்
16) பண்ணைப்புரம்
17) க. புதுப்பட்டி
18) பழனிசெட்டிபட்டி
19) ஓடைப்பட்டி
20) குச்சனூர்
21) மார்க்கையன்கோட்டை
22) கோம்பை

மேற்கண்ட புகார்கள் குறித்து கீழ்க்கண்ட விவரங்களையும் மேற்கண்ட அலுவலர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

(1) மனுதாரர் தனது மனுவில், குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால் அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் திறக்கப்பட்டு, அதில் தொழில்நுட்ப ரீதியில் ( Technical Bid ) தகுதியில்லாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டது.

(2) பேரூராட்சிகளில் கடந்த ஆண்டுகளில் குடிநீர் குழாய்களில் ஏற்பட்ட பழுதுகளுக்கேற்ப பொருட்கள் டெண்டர் வழியாக வாங்கப்பட்டன.

(3) மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு 1.7.2023 முதல் பொது சுகாதாரப் பொருட்கள் தற்போதைய ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் மேற்கண்ட 22 பேரூராட்சிகளிலும் வாங்கப்படவில்லை. கடந்த ஆண்டைய மன்றத் தீர்மானத்தின்படி ஏற்கனவே வாங்கப்பட்ட விலையிலேயே தேவையான பொது சுகாதாரப் பொருட்கள் வாங்கப்பட்டன. மனுதாரர் தனது ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறியுள்ள 1) தாமரைக்குளம் 2) தென்கரை 3) போ. மீனாட்சிபுரம் 4) கெங்குவார்பட்டி 5) பழனிசெட்டிபட்டி 6) க. புதுப்பட்டி ஆகியவற்றைத் தவிர்த்து மற்ற 16 பேரூராட்சிகளில் மனுதாரரால் ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள தரச்சான்றிதழ் வழங்குதல், ஒப்பந்ததாரர் தேனியைச் சேர்ந்தவராக இருத்தல், வருமான சான்றிதழ், நிறுவனத்தின் 3 வருடகால வரவு செலவு மற்றும் அனுபவ சான்றிதழ் சமர்பிக்காதது போன்ற தகுதிகள் இல்லாததால் மனுதாரரது ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை,

(4) மேலும் மேற்கண்ட 22 பேரூராட்சிகளில் பொது சுகாதாரப் பொருட்கள் வழங்கும் ஒப்பந்தப்புள்ளிகளில், ஒப்பந்ததாரர்கள் அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதலாக விலைப் புள்ளிகள் அளித்ததால், 12 பேரூராட்சிகளில் ஒப்பந்ததாரர்களுடன் பொருட்களுக்கான விலை குறைப்பு பற்றிய பேச்சுவார்த்தையும் (Negotiation) நடைபெற்று வருகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு

(5) பொது சுகாதாரப் பொருட்களுக்கான விலை குறைப்பு பேச்சுவார்த்தை

1) ஹைவேவிஸ்
2) பூதிப்புரம்
3) மேலச்சொக்கநாதபுரம்
4) உத்தமபாளையம்
5) தேவாரம்
6) ஒடைப்பட்டி
7) க. புதுப்பட்டி
8) தென்கரை
9) தாமரைக்குளம்
10) போ. மீனாட்சிபுரம்
11) கெங்குவார்பட்டி
12) பழனிசெட்டிபட்டி

(6) மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட பேரூராட்சிகள்

1) காமயகவுண்டன்பட்டி
2) ஆண்டிபட்டி
3) அனுமந்தன்பட்டி
4) தேவதானப்பட்டி
5) வீரபாண்டி
6) வடுகபட்டி
7) பண்ணைப்புரம்
8) குச்சனூர்
9) மார்க்கையன்கோட்டை
10) கோம்பை

- மேற்கண்ட விலைகுறைப்பு பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர்களுடன் உடன்பாடு ஏற்படாதபட்சத்தில் மேற்கண்ட சுகாதாரப் பொருட்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ரத்து செய்யப்பட்டு ஒருசில நிபந்தனைகளையும் சேர்த்து மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

- மேலும் இந்நேர்வில் ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும்போது அதற்கான ஒப்பந்த நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதில் ஒருசில பேரூராட்சிகளில் குறைந்த எண்ணிக்கையிலான நிபந்தனைகளும், ஒருசிலவற்றில் அதிகபட்ச எண்ணிக்கையிலான நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பழனிச்செட்டிப்பட்டி பேரூராட்சியில் 11 நிபந்தனைகளும், உத்தமபாளையம் பேரூராட்சியில் 19 நிபந்தனைகளும் மேலும் வடுகப்பட்டியில் 20 நிபந்தனைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பாடாக வரையறுக்கப்பட்டுள்ளது. அம்முரண்பாடுகளை சீர்செய்திட பேரூராட்சிகளில் உடன் நடவடிக்கை எடுத்து, தேனி மாவட்ட பேரூராட்சிகளில் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரே மாதிரியான நிபந்தனைகளுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட 22 பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களின் பதில் அறிக்கையை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

- முறையீட்டு மனுதாரரின் புகார் மனுக்கள், வாக்குமூலம், தேனி மாவட்ட 22 பேரூராட்சி செயல் அலுவலர்களின் அறிக்கைகள், தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் 7 செயல் அலுவலர்கள் சேர்ந்து அளித்த வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மதுரை மாவட்டம் திருநகர் என்கிற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திருமதி.P.ராஜலட்சுமி என்பவர் தனது 09.08.2023 நாளிட்ட 22 முறையீட்டு மனுக்களில் தேனி மாவட்டத்திற்குட்பட்ட 22 பேரூராட்சிகளில் 2023 – 24 ஆம் ஆண்டிற்கு தேவையான சுகாதாரம், தெருவிளக்கு மற்றும் குடிநீர் தொடர்பான பொருட்களுக்கு பேரூராட்சிகளால் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்படாமல் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வகையில் முறைகேடுகள் நடைபெறுகிறது என புகார் தெரிவித்துள்ளார். இப்புகார் மனு குறித்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் விவரங்கள் தெரியவருகிறது.

- தேனி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து 22 பேரூராட்சிகளில் 2023 –24 ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகளுக்கான உதிரி பாகங்கள் விநியோகம் செய்தல், பொது சுகாதார கிருமிநாசினி பொருட்கள் மற்றும் தெருவிளக்கு பொருட்கள் விநியோகம் செய்ய ரூ 10/– இலட்சம் முதல் ரூ 30/– இலட்சம் மதிப்பீடுகளில் தனித்தனியே பேரூராட்சிகளால் 24.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 12.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும் என ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- மனுதாரரின் புகார் குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது வாக்குமூலத்தில் அனைத்து 22 பேரூராட்சிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, அதில் 10 பேரூராட்சிகளில், தொழில்நுட்ப ரீதியில் (Technical Bid) தகுதியில்லாத ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதால் அந்த 10 ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டும், மீதமுள்ள 12 பேரூராட்சிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலையானது அரசு நிர்ணயம் செய்த விலையைவிட கூடுதலாக இருந்த காரணத்தால், விலை குறைப்புக்கான பேச்சுவார்த்தை (Negotiation) நடைபெற்று வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.
- பேரூராட்சிகளுக்குத் தேவையான தெருவிளக்கு பொருட்கள் குடிநீர் உபகரணங்கள் மற்றும் பொது சுகாதாரப் பொருட்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்யும் நேர்வில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் குறித்து பேரூராட்சிகளின் இயக்குநரின் சுற்றறிக்கைகள் எண். 1/2008/இ2 நாள் 25.01.2008, ந.க.எண்.3460/2020/இ3, நாள் 02.06.2021 மற்றும் ந.க.எண்.632/2019/ஊ1, நாள் 03.09.2021–லும் மற்றும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 09.05.2023 நாளிட்ட குறிப்பாணையிலும் நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.
- அனைத்து 22 பேரூராட்சிகளும் ஒரே மாதிரியான ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் போது, ஹைவேவிஸ், அனுமந்தன்பட்டி, போ. மீனாட்சிபுரம், பூதிப்புரம், மேலச்சொக்கநாதபுரம் வீரபாண்டி, தாமரைகுளம், பண்ணைப்புரம், க.புதுப்பட்டி, ஓடைப்பட்டி, குச்சனூர் மற்றும் கோம்பை ஆகிய பேரூராட்சிகள் 10 நிபந்தனைகளுடனும், காமயகவுண்டன்பட்டி, கெங்குவார்பட்டி, தேவதானப்பட்டி, பழனிசெட்டிபட்டி மற்றும் மார்க்கைகன்கோட்டை ஆகிய பேரூராட்சிகள் 11 நிபந்தனைகளுடன், ஆண்டிப்பட்டி பேரூராட்சி 12 நிபந்தனைகளுடனும், உத்தமபாளையம் பேரூராட்சி 19 நிபந்தனைகளுடன் மற்றும் வடுகப்பட்டி பேரூராட்சி 20 நிபந்தனைகளுடனும், முரண்பாடாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியுள்ளதன் மூலம் சில முக்கியமான நிபந்தனைகள் விடுபட்டுள்ளன. உதாரணமாக

  a) சுகாதாரப் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைப் பணிகள் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து, அங்கீகரிக்கப்பட்ட விலையில் மட்டுமே விநியோகம் செய்ய வேண்டும்.

  b) ஒப்பந்தப்பணிகளை உள்குத்தகைக்கு விடக்கூடாது.

  c) ஒப்பந்தப்புள்ளி கோரும் நிறுவனம் GST, வருமானவரி செலுத்தப்பட்டவை போன்ற ஆவணங்களுடன் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

  d) விலைப்புள்ளிகள் பொதுப்பணித்துறை பட்டியல், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பட்டியல், மாவட்ட ஆட்சித்தலைவரால் வெளியிடப்படும் பட்டியல், சுகாதாரத்துறை பட்டியல், உள்ளூர் விலைப்புள்ளி பட்டியல் ஆகியவைகளுடன் ஒத்திசைவு செய்யப்பட்டு இறுதி செய்யப்படும்.

- ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க சம்பந்தப்பட்ட மாவட்டத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்று ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் இல்லாத நிலையில், சம்பந்தப்பட்ட மாவட்டத்தை சேர்ந்தவரல்ல என தெரிவித்து ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டுள்ளது, ஒப்பந்தப்புள்ளி சட்டத்திற்கு முரணானதாகும்.

- ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு, செய்தித்தாள், சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகை மற்றும் பேரூராட்சிக்குட்பட்ட அரசு அலுவலகங்களில் விளம்பரம் செய்யப்படாமலும் மற்றும் மாவட்ட செய்தி மலரிலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்படவில்லை என்பதும் ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

- பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான எந்தவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

- 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகள் (2000 ஆம் ஆண்டு) ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளின் கீழ் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு ரூ 10/– இலட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ளதால், செய்தித்தாள் மற்றும் இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரிய நிலையில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி சட்டத்திற்கு மாறாக இருந்தால், அவை நிராகரிக்கப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் சென்ற 2022–23 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களிடமே 2022–23 ஆம் ஆண்டுக்கான ஒப்பந்தப்புள்ளி விலைக்கே கொள்முதல் செய்திட சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவரும் செயலானது தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பானதாகும். பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களின் இத்தகைய செயலினை இம்முறைமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

- தேனி மாவட்டத்திற்குட்பட்ட 22 பேரூராட்சிகளுக்கு தேவையான குடிநீர் குழாய் பொருட்கள் மொத்தம் ரூ.2.35 கோடி மதிப்பீட்டிலும், சுகாதாரப் பொருட்கள் ரூ.2.25 கோடி மற்றும் தெருவிளக்கு பொருட்கள் ரூ 60 இலட்சம் மதிப்பீட்டிலும் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் என அனைத்தும் ஒரே தேதியில் கோரும் போது இந்த ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்காமல் பொறுப்பற்ற முறையில் செயல்பட்டுள்ள தேனி மாவட்ட பேரூராட்சிகள் உதவி இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்நிலையில், 2023–24 ஆம் ஆண்டிற்கான 22 பேரூராட்சிகளுக்கு தேவையான குடிநீர், பொது சுகாதாரம் மற்றும் தெருவிளக்கு பொருட்கள் கொள்முதல் செய்திட அனைத்து பேரூராட்சிகளும் ஒரே மாதிரியான எவ்வித விடுதலுமில்லாத ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுடன் மறு ஒப்பந்தப்புள்ளி வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களை அறிவுறுத்துமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The whole Tendering process in this case is flawed, uneven, unfair, inequitable and contrary to the provisions of the Tender principles for the following reasons:-

1) The Tender conditions differ and vary from each Town Panchayat. The number of conditions is not uniform and identical for the procurement of the same materials meant for Sanitation, Drinking water supply and Street lighting. There is no level playing field.
2) The condition that the Tender respondent should be a dealer in Theni District and produce certificate to that effect is not explicitly stated in any Town Panchayat but imposed only after opening of the Technical bids. This appears to be an afterthought after opening the Bids.
3) The Petitioner's tender response has been accepted in its technical bid in 6 Town Panchayats but not in other Town Panchayats. How and why? Discrepancy and glaring discrimination exposed. This is not explained clearly.
4) The total value of the Tender for all the 22 Town Panchayats is around Rs. 35 crores for the same materials, articles and consumables. The Assistant Director of the District has not issued instructions to the Town Panchayats under his supervision and control as to the stipulation of Conditions in a uniform manner in order to avoid litigations and court cases by the unsuccessful bidders exposing the short comings, defects and gaping holes in the Tender Procedure.
5) The entire exercise creates valid and reasonable suspicions in the mind of the Forum that the Town Panchayats of the district have same bidder in their preferential scope and frame their own technical terms and conditions in their tender notification with favoritism in focus.
6) The Tender in question before the Forum is therefore ordered to be withdrawn or cancelled and a new Tender to be floated in accordance with the standard procedure of Tendering with appropriate Terms and Conditions without giving room for complaints of this kind due to the omissions and irregularities committed by the Town Panchayat local bodies of Theni District. The Director of Town Panchayat is directed to issue suitable instructions to the Theni Assistant Director to be vigilant, proactive and guiding the Town Panchayats in accordance with standard Tendering procedure for procurement of materials without leaving to the discretion of the Executive Officers to avoid court cases and allegations. A detailed circular may be sent to all the Districts on the subject to avoid recurrence of complaints and violations of this nature.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்:–

1) திருமதி.P.ராஜலட்சுமி,
மோகனபிரியா டிரேடர்ஸ்,
C41–1, நாகா காம்ளக்ஸ், நேருஜீ தெரு,
திருநகர் 3வது நிறுத்தம், மதுரை மாவட்டம் – 625 006.

2) செயல் அலுவலர்கள்

காமயகவுண்டன்பட்டி பேரூராட்சி,தேனி மாவட்டம்.
ஆண்டிபட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
ஹைவேவிஸ் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
அனுமந்தன்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
கெங்குவார்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
போ.மீனாட்சிபுரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
பூதிப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
தேவதானப்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி,தேனி மாவட்டம்.
வீரபாண்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
உத்தமபாளையம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
வடுகபட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
தேவாரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
தென்கரை பேரூராட்சி, தேனி மாவட்டம்.
தாமரைக்குளம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
பண்ணைப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
க. புதுப்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
ஓடைப்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.
குச்சனூர் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
மார்க்கையன்கோட்டை பேரூராட்சி, தேனி மாவட்டம்.
கோம்பை பேரூராட்சி, தேனி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை—28.

4) இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை — 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்
19/1/2023

சென்னை-600 032